**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

திட்டப்பணிகள் பேரூராட்சிகள் திட்டப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் அதிகாரம் நடைமுறை வரம்பினை உயர்த்துதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரு-1) துறை**

அரசு ஆணை (நிலை)எண். 147 நாள் 9.6.97

1. அரசாணை (நிலை)எண்.729 ஊரக வளர்ச்சித்துறை நாள் 6.9.90
2. அரசாணை (நிலை)எண்.889, ஊரக வளர்ச்சித்துறை நாள் 1.11.90
3. பேரூராட்சிகளின் இயக்குநர் நேர்முக கடித எண்.27020/96/டி1நாள்27.5.97

ஆணை

பேரூராட்சிகளில் உள்ள உபரியான நிதியைக்கொண்டு பல்வேறு திட்டப்பணிகளை மேற்கொள்ள மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில் கீழ்க்கண்ட அதிகார உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1. பேரூராட்சி மன்ற அனுமதியுடன் ரூ.10000/- வரையுள்ள செயல் அலுவலர் தனிப்பட்ட பணிகள் ((Individual Works)
2. ரூ.50000/- வரையுள்ள தனிப்பட்ட பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்
3. ரூ.50000/- முதல் ரூ.2.00 லட்சம் வரையுள்ள பேரூராட்சிகளின் இயக்குநர் தனிப்பட்ட பணிகள்
4. ரூ.2.00 இலட்சத்திற்கு மேலுள்ள தனிப்பட்ட பணிகள் அரசு

2. மேலும், மேலே படிக்கப்பட்ட ஆணையில், இருப்புத் தொகை (Reserve Funds ) ரூ.2.00 லட்சம் மற்றும் பராமரிப்பு செலவு, பணியாளரின் சம்பளச் செலவு ஆகியவற்றிற்குப் போக எஞ்சியுள்ள தொகையே உபரியான நிதி எனக் கணக்கிட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதத்தில் இந்த அதிகார வரம்பினை கீழ்க்கண்ட காரணங்களால் அதிகரிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

அ) வீட்டுவரியைச் சொத்துவரியாக மாற்றியுள்ளதால் பேரூராட்சிகளில் வருமானம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

ஆ) தற்போது அரசு எடுத்துள்ள கொள்கை முடிவுகளினால் (Devolution of funds) அதிக அளவில் நிதி பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இ) 10வது நிதி ஆணையம் பரிந்துரையின் மூலம் ஒவ்வொரு பேரூராட்சிக்கும் அரசு மான்யம் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

ஈ) பேரூராட்சிகளுக்குத் தேர்தல் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் தற்போது பொறுப்பேற்றுள்ளது.

ய) தற்போதுள்ள அதிகார வரம்பு 1990ல் நிர்ணயிக்கப்பட்டது அதன்பின்பு பெருமளவில் நிதி பேரூராட்சிகளுக்குக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஊ) ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் நிர்வாக ஒப்புதலளிப்பதற்கு அதிகார வரம்புகள் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

எ) நகராட்சிகளிலும், நகர்மன்றங்களுக்கும், ஏனைய அலுவலர்களுக்கும் உரிய அதிகார வரம்பு தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

ஏ) பேரூராட்சிகளில் தற்போதுள்ள வரம்பின்படி ஒவ்வொரு பணிக்கும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் செயற்குறிப்புகளை அனுப்பி, ஆணை பெற்ற பின்பு பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளதால் மிகுந்த காலதாமதம் ஏற்படுகின்றது.

அரசு, உரிய ஆய்வுக்குப்பின், பேரூராட்சிகளில் அரசு மானியம் மற்றும் பேரூராட்சி மன்றங்களுக்கு திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்புதல் வழங்கும் அதிகார வரம்பைக் கீழ்கண்டவாறு உயர்த்தலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

| பேரூராட்சியின் தரம் | அதிகாரிகள் | அதிகார வரம்புகள் (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1. சிறப்பு நிலை | 1)பேரூராட்சி மன்றம் | 2.00 |
| | 2)உதவி இயக்குநர் | 5.00 |
| | 3)மாவட்ட ஆட்சித் தலைவர் | 10.00 |
| | 4)பேரூராட்சிகளின் இயக்குநர் | 100.00 |
| | 5) அரசு | 100.00க்கு மேல் |
| 2. தேர்வுநிலை | 1)பேரூராட்சி மன்றம் | 2.00 |
| | 2)உதவி இயக்குநர் | 5.00 |
| | 3)மாவட்ட ஆட்சித் தலைவர் | 10.00 |
| | 4)பேரூராட்சிகளின் இயக்குநர் | 100.00 |
| | 5) அரசு | 100.00க்கு மேல் |
| 3. நிலை - 1 | 1)பேரூராட்சி மன்றம் | 1.00 |
| | 2)உதவி இயக்குநர் | 5.00 |
| | 3)மாவட்ட ஆட்சித் தலைவர் | 10.00 |
| | 4)பேரூராட்சிகளின் இயக்குநர் | 100.00 |
| | 5) அரசு | 100.00க்கு மேல் |
| 4. நிலை - 2 | 1)பேரூராட்சி மன்றம் | 1.00 |
| | 2)உதவி இயக்குநர் | 5.00 |
| | 3)மாவட்ட ஆட்சித் தலைவர் | 10.00 |
| | 4)பேரூராட்சிகளின் இயக்குநர் | 100.00 |
| | 5) அரசு | 100.00க்கு மேல் |

5. ஒவ்வொரு பேரூராட்சியும் ஒரு வருட காலத்திற்குத் தேவையான பணியாளர்கள் சம்பளச் செலவு, மின் கட்டணம், வாகன பராமரிப்புச் செலவு, இடை நிகழ்வு செலவு, இதர இயந்திர மற்றும் பழுதுபார்ப்புச் செலவு முதலானவற்றைக் கணக்கிட்டு அத்தொகையை ஒதுக்கி வைத்துவிட்டு எஞ்சியுள்ள தொகையை மட்டுமே பேரூராட்சி உபரி நிதியாகக் கணக்கிட வேண்டும்.

6. இவ்வாணை நிதித்துறையின், அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.2668 எப்எஸ்பி97, நாள் 29.5.97ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி

எஸ். மாலதி,
அரசுச் செயலாளர்